OS: 68/2018

Date: 11.10.2023

பெயர் : கலா

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை :</u>-** வாதிகள் தரப்பில்

தாவா சொத்திற்கான பதில் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நான் விவரங்களை சொன்னேன். அம்சா என்ன பதிலுரை போட்டுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது பதிலுரையில் பிரகாஷ் என்பவருக்கு சொத்துக்கள் பாத்தியபட்டது அல்ல என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். பிரகாசிற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என பதிலுரையில் சொல்லிவிட்டு எதற்காக மேற்படி பிரகாஷை மேட்டுர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் சேர்த்தேன் என்றால் பிரகாசிற்கு அம்சாவும், தியாகராஜனும் பவர் கொடுத்ததால் வழக்கில் சேர்த்தேன். பிரகாசின் சகோதரர் தான் தியாகராஜன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பிரகாசின் சகோதரர் தியாகராஜனுக்கு பாத்தியப்பட்டதாகத்தான் சொல்கிறேன் என்றால் சரிதான். அதன்படி தியாகராஜனுக்குதான் பாத்தியப்பட்ட சொத்து என்பதை காட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். தியாகராஜனுக்கு சொத்தானது தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதற்கான பத்திரம் உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. சொத்தினை மேட்டுர் சார்பு நீதிமன்றத்தின் மூலம் கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன் அதற்கு சுவாதீன சான்று நீதிமன்றத்தின் மூலம் எடுத்ததற்கு கொடுத்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

கிரயம் ஆன பின்னிட்டு சொத்துக்களின் பட்டா, சிட்டா எனது பெயரில் மாற்றம் செய்துள்ளேனா என்றால் மாற்றம் செய்துள்ளேன். எனது பெயரில் பட்டா, சிட்டா இருந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாமலேயே நான் பொய்யாக பட்டா எனது பெயரில் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ன் படி கூட்டு பட்டாவினை தான் நான் ஒப்படைத்துள்ளேன் என்றும், எனது பெயரில் பட்டா இருப்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் வாதிகள் என்ன சர்வே எண்ணில் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சர்வே எண்.171/1 என்ற எண்ணில் போட்டுள்ளார்கள். நான் சொல்வது தவறு என்றும், வாதிகள் தாவாவில் சர்வே எண்.171/3

என்ற எண்ணில்தான் வழக்கு போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியாக எனக்கு தெரியவில்லை. நான் ஏற்கனவே 2 ம் எண் பிளாட்டிற்கு மொத்தமாக ரூ.4,00,000/- கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அது தவறு என்றும், மொத்தமாகவே 3 பிளாட்டுகளுக்கும் சேர்ந்துதான் ரூ.4,00,000/- விலை பேசப்பட்டது என்றால் சரிதான். நான் அரசு பணியில் எவ்வளவு ஆண்டுகளாக இருக்கிறேன் என்றால் 15 ஆண்டுகளாக இருக்கிறேன்.

நான் மேற்படி 3 பிளாட்டுகள் வாங்குவதற்கு அரசின் முன் அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் நான் அவ்வப்போது தாக்கல் செய்யப்படும் எனது சொத்து பட்டியல் காட்டும் போது மேற்படி 3 பிளாட்டுகளையும் அதில் காட்டியுள்ளேன். மேற்படி அரசிடம் சமர்ப்பித்துள்ள சொத்து பட்டியலுக்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்துக்களும், வேறு சில சொத்துக்களும் ஆரம்பத்தில் ஒரு முருகேசகவுண்டர் மகன் எம்.எஸ்.பிரகாசத்திற்கு பாத்தியப்பட்து என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேலும் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எம்.எஸ். பிரகாசத்தின் சொத்துக்கள் 1, 2, 7, 9, 14, 15 மற்றும் 17 என்ற எண்கள் கொண்ட வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டன என்று வாதிகள் கூறுவது சரியாகும் என சொல்லியுள்ளேன். ஆகவே பிரகாசத்திற்கு பாத்தியபட்ட சொத்துக்களை நான் மாற்றி தியாகராஜனுக்கு என சொல்வது தவறானது என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்துக்கு யார் உண்மையான உரிமையாளர் என்பதை தெரிந்துகொள்ளாமலேயே நான் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

நானும், அம்சா என்பவரும் சேர்ந்து நீதிமன்றத்தின் மூலம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் எத்தனை சாட்சிகள் மற்றும் எத்தனை ஆவணங்கள் விசாரித்தார்கள் என்பதை குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்துக்களுக்கு எம்.எஸ்.பிரகாசம் தான் உரிமையாளர் ஆகவே வாதிகள் முறையாக கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் வாங்கிய கிரய ஆவணத்தை பொருத்து செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை ஜெயகுமார் அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டாவானது எனது பெயரில் வாங்கியுள்ளதாக

குறிப்பிட்டுள்ளேன் ஆனால் நான் அதனை தாக்கல் செய்யவில்லை. 02.05.2016 ம் தேதியில் ஓமலூர், காமராஜர் நகரில் குடியிருக்கும் மருதமுத்து மகன் ரமேசிற்கு ரூ.13,50,000/- க்கு ஒரு கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்தபடி மீதி ரூ.50,000/- காலகெடு வைத்து எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்த விவரங்களை நான் எனது முதல் விசாரணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எத்தனை பிளாட்டுகள் விற்பதாக ஒப்பந்தம் போட்டோம் என்றால் பிளாட் எண் எனக்கு ஞாபகம் இல்லை, 2 பிளாட்டுகள் போடப்பட்டது. நானும், அம்சாவும் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் பெறப்பட்ட தீர்ப்பானது இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது கணவர் பிரகாசத்திடம் எத்தனை பிளாட்டுகள் வாங்கியுள்ளார் என்றால் அவர் பிளாட்டே வாங்கவில்லை. எனக்கு ஓமலூரில் ஒரு சொந்த வீடும், சேலம் கண்ணங்குறிச்சியில் ஒரு மாடி வீடும் உள்ளது என்றால் சேலத்தில் உள்ள வீடு எனது மாமியார் வீடு. வாதிகள் தாவாவில் கோரியுள்ளபடி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>: -இல்லை.

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.